[1984 பிப்ரவரி 16

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, தமிழகத்திலே எவ்வளவு யானைகள் இருக்கின்றன என்பது ஓரளவுக்குக் கணக்கிடப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த விவரம் இப்போது என்னிடத்திலே இல்லை. இதைப் போன்ற கடுமையான வனக் குற்றங்கள் செய்பவர்களை, குறிப்பாக வன விலங்குகளை பாதுகாப்பிற்காக கொல்வதிலோ, தந்தங்களை எடுக்கின்ற முயற்சியிலோ ஈடுபடுகின்ற குற்றவாளிகளைப் பிடித்து தண்டிப் பதற்காக இப்போது பெரிய முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதை யொட்டித் தான் ஒரு டி.ஐ.ஜி. தலைமையில் தனிப் போலீஸ் படையே வனத் துறைத் தலைவரின் கீழ் நியமிக்கப்பட்டிருக்கிறது.

Teachers absorbed from Aided Schools.

* 25. *Q.*—Dr. T. R. JANARTHANAM (on behalf of Thiru P. R. Thomas) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that as per G.O. Ms. No. 992, Education, dated 1st June 1978, teachers absorbed from Panchayat Union Schools while upgrading such schools, are eligible to have their services counted for awarding Selection Grade from 1st July 1971 on the basis of percentage ; and

(*b*) if so, the reasons for not extending the same privilege to teachers absorbed from Aided Schools ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) அரசாணை நிலை எண் 992, கல்வி, நாள் 1—6—1978-ல் வெளி யிடப்பட்ட ஆணை பஞ்சாயத்து யூனியன் பள்ளி மற்றும் முன்னாள் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கே பொருந்தும். அவர்கள் முன்பு வெவ்வேறு பஞ்சாயத்து ஒன்றியங்களின் கீழ் பணிபுரிந்திருந்தாலும், அவர்களின் முந்தைய பணி தல நிர்வாகப் பணியாக ஒரே பணியின் கீழ் வருவதோடு பணிமூப்பும் மாவட்ட அடிப்படை யிலேயே இருப்பதாலும் மாவட்டக் கழகப் பணியில் அவர்கள் ஈர்க்கப்பட்ட போது, அவர்களது பணிமூப்பில் எந்த மாற்றமும் ஏற்படாத காரணத்தால்,

1984 பிப்ரவரி 16]

10 விழுக்காடு அடிப்படையில் தேர்வுநிலை வழங்க அவர்களது முந்தைய பணியையும் கணக்கில் எடுத்துக் கொள்வதில் எந்தவித சிரமமும் இல்லை. ஆனால் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு 10 விழுக்காடு அடிப்படையில் அந்தந்த ஆசிரியர்கள் அந்தந்த நிர்வாகத்தின் கீழ் ஆற்றிய பணியின் அடிப்படையிலான பணிமூப்பைக் கணக்கில் கொண்டு தேர்வுநிலை வழங்கப்படுகிறது. அவ்வாறு தேர்வு நிலை வழங்கும்போது ஒவ்வொரு தனியார் பள்ளியும் வெவ்வேறு நிர்வாகத்தின்கீழ் உள்ளதால், அந்தந்த நிர்வாகத்தின் கீழ் ஆசிரியர் ஆற்றியுள்ள பணிக்காலத்தையே பணிமூப்பிற்கு எடுத்துக் கொள்ள முடியும். அவ்வாறின்றி வேறு நிர்வாகத்தின் கீழான முந்தைய பணியை தேர்வு நிலைக்கு எடுத்துக் கொண்டால், ஒரு நிர்வாகத்தின் பணிமூப்புள்ள ஆசிரியர் (Senior) சாதாரண நிலையிலிருக்கும்போது, அவரைவிட பணிமூப்பில் இளையவரானவர் வேறு நிர்வாகத்தின்கீழ் ஆற்றிய பணியை தேர்வுநிலைக்கு கணக்கிட்டதின் காரணமாக தேர்வுநிலையில் இருவருக்கும் ஏறுமாறான நிலை ஏற்படும். எனவே, உதவி பெறும் பள்ளிகளிலிருந்து அரசுப் பள்ளிக்கு ஈர்க்கப்பட்ட ஆசிரியர்களுக்கு அவர்களது முந்தைய பணிக்காலத்தைக் கணக்கிட்டு தேர்வு நிலை வழங்குவது சாத்தியமில்லை.

திரு. க. மீனாட்சிசுந்தரம் : தலைவர் அவர்களே, தனியார் பள்ளிகளைப் பொறுத்தவரையில், ஒரு பள்ளியிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களின் மொத்த எண்ணிக்கையின் அடிப்படையிலே 10 விழுக்காடு தேர்வுநிலை இப்போது இல்லை என்று சொல்லும்போது, அதிலே ஏழாண்டு, ஆறாண்டு பணியாற்றியவர்கள் கூட தேர்வுநிலை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுவதும், ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளிலே, அரசுப் பள்ளிகளிலே அதே எண்ணிக்கையின் அடிப்படையிலே 10 விழுக்காடு என்று சொல்கின்றபோது 10 ஆண்டு 15 ஆண்டு ஆனாலும் தேர்வு நிலை கிடைக்காத நிலையும் ஏற்பட்டு, முரணான நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு எல்லோருக்குமே எண்ணிக்கையின் அடிப்படையிலே 10 விழுக்காடு என்று சொல்லுவதை விட்டு, 10 ஆண்டுகள் பணியின் அடிப்படை என்று வழங்குவதற்குரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, அப்படி ஒரு எண்ணம் இல்லை.